# HNB GRAMEEN
# மெஹெவர

இருள் நீக்கும் உன்னத பணி

4 ஆம் தொகுதி - இரண்டாவது இதழ் - 2015 ஜுலை



தயாரிப்பு: எஸ்.எல். திருமதி இந்ராணி
எச்.என்.பி. கிராமின் கண்டிக் கிளை அங்கத்தவர்
படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க




வாழ்க்கையின் அர்த்தம்

# வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் திருப்பங்கள் (Turning Point)

உங்கள், எனது மற்றும் சகலரினதும் எதிர்பார்ப்பு வாழ்க்கையில் வெற்றிகரமாக கொண்டு செல்வதேயாகும். வெற்றிகரமான வாழ்க்கைக்கு எம்மிடம் உறுதியும் வலிமையும் காணப்பட்டாலும் 5வீதத்துக்கும் குறைவான மக்களே உலகத்தில் தனது கனவை நனவாக்கிக் கொள்கிறார்கள். அவ்வாறெனில். . . நீங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றிகரமானதாக்கிக் கொள்வது எவ்வாறு? உங்களது கனவு உள்ளத்தில் இருந்தால் மாத்திரம் நனவாகாது. உங்களுடைய நோக்கம் தூய்மையானதாக இருந்தால் கூட அது நனவாகாது. ஆகவே, உங்களின் எதிர்கால வாழ்க்கையை வெற்றிகரமாக்கிக் கொள்ள முன்மாதிரியான வழிமுறைகளை இந்தக் கட்டுரையின் மூலம் வெளிப்படுத்தி உங்கள் வாழ்க்கையின் வெற்றிக்கு வழிவகுக்கும் தூணாக இருக்குமென நான் நம்பிக்கை கொள்கிறேன். இதன் மூலம் உங்களுக்கு உங்களிடம் மறைந்து காணப்படும் சில விடயங்களை வெளிக் கொணர்ந்து அந்த இலக்கை அடைவதற்காக நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்ய வழியேற்படுத்திக் கொடுக்கப்படுகிறது.

உங்களுக்கு உங்கள் வாழ்க்கை சுமையாக இருக்கிறதா? அவ்வாறில்லையானால் வாழ்க்கை நிம்மதியாக இருக்கின்றதா? எமது நாட்டின் பெரும்பாலான இளைஞர் யுவதிகள் சரியான காலப்பகுதியில் ஒரு சிலரே இலக்கை அடைந்து கொள்வதில் வெற்றி காண்கின்றனர். பெரும்பாலானவர்கள் மனநோயினாலும் துன்பத்தினாலும் துவண்டுவிடுகிறார்கள். இவ்விதம் வாழும் போது தமது வாழ்க்கையை மேலும் மேலும் இருண்ட யுகத்துக்கே கொண்டு செல்லும் என்பதில் சந்தேகமில்லை.

எமது நாட்டில் மாத்திரமல்லாது வெளிநாடுகளிலும் இவ்விதம் வாழ்க்கையில் தோல்வியடைந்து பின்னர் வெற்றி பெற்றவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் நாம் கீழே ஆராய்ந்து பார்க்கலாம் என்று நினைக்கிறோம்.

தாயை இழந்த சுட்டிக்கார சிறு குழந்தைக்கு, சின்னம்மா ஒருவரை தகப்பன் அழைத்து வந்தார். மாற்றாந்தாய் மூலம் குழந்தையின் அன்புக்கு பங்கம் ஏற்பட்டு இன்னும் தொந்தரவுகள் வரலாம் எனவும் அநாதையாகிவிடும் என அனேகமானவர்கள் நினைத்தார்கள். குழந்தையின் தகப்பன் முதல் தனது இரண்டாம் மனைவியிடம் இந்த சுட்டிக் குழந்தையை மிகவும் அன்பாக பராமரிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர். எனினும் சிறிய தாய் அந்த கொழுத்த குழந்தையிடம் மிகவும் அன்பு செலுத்தினார். பெற்ற தாயிடம் கிடைக்காத அன்பினால் சுட்டிக் குழந்தை உலகப் பிரசித்த பெற்ற குழந்தையாக உலகத்துக்கு அறிமுகமானது. பெற்ற தாயை விட சின்னமாவினால் கிடைத்த அன்பினால் நெப்போலியன் உலகப் பிரசித்தி பெற்ற தலைவராக விளங்க காரணமாகியது.

இவ்விதம் பார்க்கும் போது அவ்வாறான துரதிஷ்டமான சம்பவங்கள் உங்களுக்கு ஏற்படும் போது அவை துர்பாக்கிய நிகழ்வாக கருதாமல் அவை வெற்றிகரமான வாழ்க்கையாக மாற்றிக் கொள்ள பழக வேண்டும்.

இலங்கையின் இரத்தினபுரி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு மாயத்தில் அழகான மாகாணமொன்று காணப்படுகிறது. அந்தப் பிரதேசம் சூரியகந்த பிரதேசமாகும். இந்த மலைக்கு சூரியன் நேரடியாக தென்படுவதால் இந்தப் பிரதேசம் அழகாக தோற்றமளிக்கின்றது. இதனால் தான் இப்பிரதேசத்தை சூரியகந்த என்ற பெயர் கொண்டு மக்கள் அழைக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் முன்பள்ளி பாடசாலையொன்றை ஆசிரியை ஒருவர் நடத்தி வந்தார். அவரின் பெயர் மஞ்சுளா.

மஞ்சுளா முன்பள்ளியை ஆசிரியராக கடமையாற்றியதுடன் அவரின் கணவர் அரச நிறுவனமொன்றில் உத்தியோகத்தராக கடமையாற்றினார். மஞ்சுளா முன்பள்ளி ஆசிரியராக இருந்தாலும் ஆசிரியத் தொழிலின் மூலம் கிடைக்கும் வருமானத்தை விட அவருடைய கடன் சுமையும் கணவரால் பொறுப்பேற்க வேண்டியேற்பட்டது.

இந்நிலையில் இருந்து மீண்டெழ மஞ்சுளா மாற்று வழியொன்றை கடைப்பிடிக்க தீர்மானித்தார். முன்பள்ளி நிறைவடைந்தவுடன் மேலதிக நேரத்தில் வியாபாரமொன்றை ஆரம்பித்து வெற்றிபெறலாம் என்று நினைத்து பயிற்சி பாடநெறியொன்றுக்காக நேரத்தை செலவிட்டார். இந்த பயிற்சி இரண்டு வாரம் நடைபெற்றது. அந்த பயிற்சி வேலைத்திட்டம் நிறைவடைந்த உடன் மஞ்சுளா புதிய முயற்சியொன்றுக்கு தமது கவனத்தை திருப்பினார்.

மஞ்சுளாவின் வாழ்க்கையில் திருப்பத்தை ஏற்படுத்தியது அவரின் கடன் சுமையாகும். அதற்கு தீர்வைப் பெற்றுக் கொள்ளவே பயிற்சி நெறியில் கலந்து கொண்டார். அதிக கடன் பளுவுக்கு தீர்வினைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்யாமல் இருந்திருந்தால் இன்றும் மாதாந்தம் 6000-8000 வரையான சம்பளமொன்றையே பெற்றிருப்பார். எனினும் இதனை முறியடித்து மனதை ஒருநிலைப்படுத்தி பல்வேறு சக்திகளை புறந்தள்ளி தமது படைப்பாற்றல் மூலம் வியாபாரமொன்றை ஆரம்பித்தார். அதுதான் சகுரா எள்ளு உருண்டை உற்பத்தியாகும். இன்று ஹங்வெல்ல, அவிஸ்ஸாவெல்ல, போன்ற பிரதேசத்தில் அவரின் எள்ளு உருண்டைகள் விற்பனை செய்யப்படுகின்றன. தற்போது மஞ்சுளாவிடம் 20இற்கும் மேற்பட்டவர்கள் தொழில் புரிகிறார்கள். மஞ்சுளாவின் மேலதிக வருமானம் மாத்திரமல்லாமல், கிராமத்தில் உள்ளவர்களுக்கும் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அவரின் வாழ்க்கை வெற்றிக்கு திருப்பு முனையாக அமைந்தது அவரின் வாழ்க்கைக்கு மேலதிக வருமானத்தை பெற்றுக் கொடுக்க அவரின் உள்ளத்தில் தோன்றிய வெளிப்பாடு மற்றும் அதன் மூலம் அவர் பங்குபற்றிய வியாபார முகாமைத்துவ பயிற்சி நெறியாகும். உங்களுக்கும் உங்கள் வாழ்க்கையை மாற்ற வேண்டுமாயின் நீங்களும் ஏதாவது புதிதாக செய்யு முடியுமா என தேடிப்பாருங்கள்.

இவ்விதமான பொருளாதார கஷ்டங்கள், கடன் சுமை ஆகியவற்றினால் தமது உயிரை கூட மாய்த்துக் கொள்ளும் காலமாக காணப்படுகின்றது. எனினும் அவ்விதம் சிந்திக்காமல் இதுவரை வாழ்ந்ததை விட வித்தியாசமாக சிந்திக்க பழகிக் கொள்ள வேண்டும். நீங்கள் அவ்விதம் மனநிலை கொண்ட மனிதர்களாக மாறிவிடுங்கள். இதன் மூலம் வாழ்க்கையில் புதிய வெளிச்சம் ஏற்படும்.

இவ்விதமான பொருளாதார கஷ்டங்கள், கடன் சுமை ஆகியவற்றினால் தமது உயிரை கூட மாய்த்துக் கொள்ளும் காலமாக காணப்படுகின்றது. எனினும் அவ்விதம் சிந்திக்காமல் இதுவரை வாழ்ந்ததை விட வித்தியாசமாக சிந்திக்க பழகிக் கொள்ள வேண்டும். நீங்கள் அவ்விதம் மனநிலை கொண்ட மனிதர்களாக மாறிவிடுங்கள். இதன் மூலம் வாழ்க்கையில் பாரிய மாற்றம் ஏற்படும்.



பிரேமசிறி கமகே
தலைவர்
கைத்தொழில் அபிவிருத்தி மத்திய நிலையம்

# கிராமின் சக்தி

# அவரின் வளர்ச்சி



**"மற்றவர்களின் பேக்கரியை கூலிக்கு எடுத்து வியாபாரம் செய்தது இன்றும் ஞாபகத்தில் இருக்கிறது"**

**மாலினி ராஜபக்ஷ**

அம்பதென்னயில் இருந்து களுவான செல்லும் பாதையில் தார் வீதியும் இடைக்கிடையே கொங்கீரீட் இடப்பட்ட பாதையாக காணப்பட்டாலும் பள்ளமும் மேடும் நிறைந்த மலையுச்சி ஏறுவதைப் போன்ற உணர்வு இப்பாதையில் செல்பவர்களுக்கு ஏற்படுவது இயற்கையே. இடைக்கிடையே கற்கள் காணப்படுவதுடன் சில இடங்களில் பாதை குண்டும் குழியுமாக கற்கள் உடைந்தும் உள்ளன. புாதையின் முன்னாள் வாகனமொன்று வருகை தந்தால் மற்ற வாகனத்துக்கு இடம் கொடுக்க முடியாமல் நீண்டதூரம் பின்னால் செல்ல வேண்டுமென்ற உணர்வுடன் வாகனத்தை செலுத்த வேண்டும். பாதையின் தன்மை பற்றி தொடர்பில் ஆராய வேண்டியதுடன் பேக்கரி தொடர்பாகவும் விசாரணை செய்ய வேண்டியேற்ப்பட்டது. பகல் பொழுது போய்க் கொண்டிருந்தது. பாண் உற்பத்தி செய்யுமிடம் வந்துவிட்டது என்பதை பாணின் வாசனை மூக்கை நுழைத்ததும் அறிந்து கொண்டோம். அந்த வாசனையுடன் சிறிய பசியொன்று எம்மை அறியாமல் வந்ததுடன் நாமும் போக்கரியை அண்மித்தோம். மாலினி சந்திரலதா ராஜபக்ஷ, அது அவரின் பெயர். கணவருடன் இணைந்து பேக்கரி தொழிலை செய்து வரும் சந்திரலதாவுக்கு நாம் விடுத்த அழைப்பை ஏற்று அவரின் வளர்ச்சி தொடர்பாக எமக்கு வழங்கிய நேர்காணலை கீழே தருகின்றோம்.

நான் மாத்தனை மானிங்கமுவ. எனது அம்மாவும், அப்பாவும் விவசாயிகள். நெல் உற்பத்திக்கு மேலதிகமாக நாம் மரக்கறி உற்பத்தியையும் செய்து வந்தோம். சகோதர, சகோதரிகள் அறுவர் கொண்ட குடும்பத்தில் நான் நான்காமவர். எங்கள் அறுவரும் வாழ்வதற்கு ஏற்ற பொருளாதார கஷ்டம் காரணமாக எனது அண்ணா வெளிநாட்டுக்கு சென்றார். அவர் வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பணத்தின் மூலமே சிறிதளவாகவேனும் கல்வி கற்க முடிந்தது. ஏன்றாலும் எனது பாடசாலை வாழ்க்கை க.பொ.த. சாதாரண வரை மட்டுபடுத்தப்பட்டது. மேலும் சிறு பராயத்தில் எனக்கு ஏற்பட்ட நோயின் காரணமாகவும் கல்வியை தொடர முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், எனக்கு பரீட்சைகளில் தோற்ற முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

புாடசாலையில் இருந்து விலகிய சிறிது காலத்திலேயே நான் திருமணம் முடித்தேன். அது நிச்சயிக்கப்பட்ட திருமணமாகும். எனது கணவர் பேக்கரி தொழில் செய்து வந்தார். எனினும் கணவரின் ஊதியத்தின் மூலம் எமது குடும்பத்தை நடத்துவதற்கு போதுமானதாக இருக்கவில்லை. இதிலிருந்து மீண்டெழுவதற்கே நாம் ஆரம்பத்தில் இருந்து முயற்சிகளை செய்து வந்தோம். ஆந்த முயற்சியின் பயனாக எனது கணவர் குருநாகலில் ஒரு கடையை கூலிக்கு எடுத்து அங்கு பாண், பனிஸ் போன்றவற்றை உற்பத்தி செய்து விநியோகித்தார். நாங்கள் அன்று வாழ்ந்த வீடு மிகச்சிறிய குடிசை வீடாக இருந்தமை இன்றும் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. ஆந்த வீடு மண் தரையாக இருந்ததுடன் சீமேந்து போடும் அளவுக்கு பணவசதி இருக்கவில்லை.

நாங்கள் ஆரம்பித்த பேக்கரியை தனிநபராக நின்று எனது கணவர் பாண், பனிஸ் உற்பத்திகளை செய்து துவிச்சக்கர வண்டியில் எடுத்துக் கொண்டு சென்று கடைகளுக்கு விநியோகித்தார். இவ்விதம் அந்த பேக்கரியை சுமார் பதினைந்து ஆண்டுகள் சிறப்பாக நடத்தி எமது வாழ்க்கையை கொண்டு சென்றோம். அவ்விதம் தொழில் புரிந்து கொண்டுதான் தற்போது நாங்கள் வசிக்கும் வீட்டை நிர்மாணித்தோம். பேக்கரி வேலை அனைத்தும் என்னால் செய்ய முடியும். எனது கணவர் இல்லாத சந்தர்ப்பத்தில் நான் தான் பேக்கரியை நடத்தினேன். இதன் மூலம் நான் தொழிலை நன்றாக கற்றுக் கொள்ள முடிந்தது. இவ்விதம் சிறப்பாக பேக்கரி நடந்து கொண்டிருந்த போது எங்கள் பிரதேசத்தில் முதல் தடவையாக பிரைம் கிராமின் நிறுவனத்தின் கலுவான மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதல் அங்கத்தவர் நான்தான். ஆப்போது எங்களுக்கு வியாபாரத்தை விருத்தி செய்வதற்கான பணம் தேவைப்பட்டது. பிரைம் கிராமின் தொடர்பாக நான் போதியளவு அறிந்து வைத்திருந்தேன். நான் அன்று எதிர்பார்த்ததைப் போன்று பிரைம் கிராமின் நிறுவனம் இன்றும் செயற்பட்டு வருவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

கிராமின் நிறுவனம் பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரமின்றி எங்களை வேறு நிதி நிறுவனங்களுக்கு செல்லவிடாமல் கிராமின் நிறுவனத்தை சக்திமிக்க நிறுவனமாக மாற்றுவதற்கு எங்களால் முடியுமென்ற நம்பிக்கை இருந்தது. இன்று அந்த கனவு நிறைவேறியுள்ளது. பல வருடங்களாக கிராமின் அங்கத்தவராக இருந்த எமக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கின்றது. ஏனெனில் நாம் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கிய காலப்பகுதியில் கிராமின் நிறுவனம் வழங்கிய பங்களிப்பு, அந்நியொன்யம் ஆகியவற்றை என்றும் மறக்க முடியாது. ஏனக்கு இன்றும் ஞாபகத்தில் இருக்கும் ஒரு விடயம் தான், நாங்கள் இன்னொருவரின் பேக்கரியை வாடகைக்கு எடுத்து செய்து கொண்டிருந்த போது தான் நாங்களும் ஒரு பேக்கரியை சொந்தமாக ஆரம்பிக்க வேண்டுமென்பதாகும். அந்தக் கனவை நிறைவேற்ற கிராமின் நிறுவனமும், அந்தக் கடனை எமக்கு பாரிய அளவில் வழங்கியமையாகும். இன்று நாங்கள் எமது வீட்டின் பின்பகுதியில் பேக்கரியை செய்து வருகிறோம். விறகு அடுப்பைக் கொண்ட போரணியில் செய்யப்படும் பாணுக்கு நல்ல கிராக்கி காணப்படுகிறது.

நாங்கள் ஆரம்பத்தில் 5000 ரூபாவை ஆரம்பத்தில் கடனாக பெற்றோம். அதன் பின்னர் 80,000 – 100,000 வரை கடனாக கிராமின் நிறுவனத்தில் பெறக்கூடியதாக இருந்தது. தேவைக்கேற்றவாறு கடன் எடுக்குமாறு கிராமின் நிறுவன உத்தியோகத்தர்கள் எங்களுக்கு அறிவுறுத்தி வருவதும் வீண் விரயங்களை தவிர்த்து எமது பேக்கரியை செய்து வந்ததால் எமக்கு கடனை திருப்பி செலுத்துவதில் எவ்வித கஷ்டமும் இருக்கவில்லை. இன்று எங்களிடம் நான்கு பேர் தொழில் புரிகின்றனர். முச்சக்கர வண்டியின் மூலமும் நேரடி விற்பனை மூலமும் எமது உற்பத்திகளை நாம் சந்தைப்படுத்தி வருகின்றோம். எமது பேக்கரியில் பாண், பனிஸ், கேக் உட்பட சகல வகையான பேக்கரி உற்பத்திகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இவ்வளவு நேரமும் பேசிக் கொண்டிருந்த போது போரணியில் பாண் உற்பத்தி பதமாக்கப்பட்டு இறக்க வேண்டியேற்பட்டது. இப்போது அதனை சகல கடைகளுக்கும் விநியோகிக்க வேண்டும். இதற்காக மாலினியின் கணவர் தயாரானார். சூடான பாணின் வாசனைக்கு மத்தியில் மாலினியிடம் இருந்து நாம் வெளியேறினோம். இவ்விதம் வளர்ச்சி பெற்ற அவரின் வியாபாரம் மேலும் விருத்தியடைய எமது இதயபூர்வமான வாழ்த்துக்களை எமது "அவரின் வளர்ச்சி" என்ற கட்டுரையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.



ஆக்கம்
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படம் - லக்ஷ்மன் குமாரதுங்க

# பிரைம் கிராமின் கிளையின் செயற்பாடுகள்



மக்கள் அபிமானம் பெற்ற நன்மக்களைக் கொண்டமைந்ததும் பாரம்பரியமாக பல்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபடும் மக்களைக் கொண்டதுமான மத்திய நிலையமாகக் காணப்படும் கண்டி, இயற்கையானதும், அழகானதும் அவ்வாறே மென்மையான காலநிலையைக் கொண்ட விசித்திரமான நகரமாகும். வழிபாட்டுத் தளங்களுக்கு அப்பால் கலாசார விழுமியங்களை கொண்ட கண்டி நகரத்தில் அமைந்துள்ள பிரைம் கிராமின் கண்டி கிளை செயற்பாடுகள் தொடர்பில் மெஹெவர இம்முறை ஆராய உள்ளது. பிரதான நகரங்கள் பலவற்றில் பரந்து காணப்படுவதும் கிராமங்கள் பலவற்றை இணைத்து செயற்பட்டு வரும் பிரைம் கிராமின் கண்டிக் கிளை, தனது சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் நோக்கத்துடன் சுமார் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் கண்டியில் ஆரம்பிக்கப்பட்டது. 2003ஆம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் திகதி கண்டி கிளை ஆரம்பிக்கப்பட்டது. கண்டி, பேராதெனிய வீதியில் இல. 678.:.16 என்ற முகவரியில் பிரதான கிளையாக ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் இல. 677, வில்லியம் கோபல்லாவ மாவத்தை, கண்டி என்ற புதிய முகவரியில் இன்று வரை தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. பிரைம் கிராமின் கிளை வலையமைப்பில் 10 இடத்தில் கண்டி கிளை இருக்கின்றது. இலட்சக்கணக்கான ஏழைப் பெண்களின் வாழ்க்கையில் செழிப்பை ஏற்படுத்தும் உன்னத நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட பிரைம் கிராமின் நிறுவனம், அந்த நோக்கத்தை அடைவதற்காக நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட கிளைகளில்

## வளமான நாட்டை கட்டியெழுப்பும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட கிராமின் இலக்கை நிறைவேற்றுவதே எமது எதிர்பார்ப்பாகும்

## பிரைம் கிராமின் கண்டி கிளை

கண்டிக் கிளையும் ஒன்றாகும். இக்கிளை அங்கத்தவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் அதன் முகாமையாளர் பண்டார ரத்னாயக்க எமக்கு வழங்கிய விசேட செவ்வியை கீழே தருகின்றோம். கண்டி நகரமானது பல்வேறு வர்த்தக செயற்பாடுகளை மையப்படுத்திய இடமாகும். இங்கு பாரம்பரியமாக ஈடுபட்டு வரும் கைத்தொழில்களும் காணப்படுகின்றன. விசேடமாக பித்தளை கைத்தொழில், வாத்தியக் கைத்தொழில் ஆகிய கைத்தொழில்களும் பாரம்பரியமாக ஈடுபட்டு வருவதுடன் இவற்றுக்கு இப்பிரதேசத்தில் பாரிய நன்மதிப்பு உள்ளன. அவ்வாறே எமது கிளைகளும் பாரிய அளவில் பரந்து காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் காணப்படும் கைத்தொழில்களில் பித்தளை கைத்தொழிலுக்கு பிலிமத்தலாவ, கடலாதெனியவும், வாத்திய கைத்தொழிலுக்கு குருகல கிராமமும் பிரசித்தி பெற்றதாகும். அவ்வாறே, சளகு உற்பத்தியில் மிகவும் பிரசித்தி பெற்ற இடமாக கருதப்படும் தவுலகல நாரங்வல பிரதேசமும் பல்லாண்டு காலமாக பாரம்பரியமாக ஈடுபட்டு வரும் கைத்தொழில்களை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றமை விசேட அம்சமாகும். அவ்வாறே கைத்தொழில்களுக்கு மேலதிகமாக ஏனைய வியாபார செயற்பாடுகளிலும் இங்குள்ள மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். தைக்கப்பட்ட ஆடைகள், பல்வேறு சமையலறை உற்பத்திகள், சில்லறை வர்த்தக நிலையங்கள், பல்வேறு விவசாய உற்பத்திகள் என்பனவும் இங்கு காணப்படுகின்றன. எமது அங்கத்தவர்கள் இந்தத் துறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு அந்த கைத்தொழிலில் ஈடுபடவும் அவர்களுக்கு கைத்தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு தேவையான கடன்களையும் ஆலோசனைகளையும் சதாகாலமும் வழங்கி வருகின்றோம். இன்று வரை 192 மத்திய நிலையங்களில் 6586 அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. கண்டி கிளையானது இப்பிரதேசத்தில் பரந்து காணப்படும் மத்திய நிலையங்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. அவ்வாறே, இப்பிரதேசத்தில் புதிதாக கண்டி கிளையினால் கீழ் நிர்வகிக்கப்படும் ரிகிலகஸ்கட சேவை மத்திய நிலையம் கடந்த ஜுன் மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட்டது. கண்டியில் இருந்து வெகு தூரத்தில் இருப்பதனாலும், இங்கிருந்து விரைவாக செல்ல முடியாத காரணத்தினாலும் அவ்வாறே, ரிகிலகஸ்கட பிரதேச மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது. கண்டியில் இருந்து கொழும்பு வீதியில் கடுகன்னாவ வரையும் அடுத்த பக்கத்தில் கம்பளை வீதியில் வெலிகல்ல வரையும், கலஹா வீதியில் தெல்தோட்டை வரையும் திகன வீதியில் தெல்தெனிய வரையும் எமது மத்திய நிலையங்கள் 192 ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இந்த மத்திய நிலையங்கள் ஊடாக அந்தப் பிரதேசத்தின் சிறு கைத்தொழிலில் ஈடுபடும் எமது நிறுவனத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளும் அங்கத்தவர்களுக்கு கடன் உதவி வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

### பிரைம் கிராமின் கண்டிக் கிளை உத்தியோகத்தர்கள்

**பிரதேச முகாமையாளர்**
சுதத் விம லசூரிய
**பிரதேச கணக்காளர்**
ரங்கன மல்லவராச்சி
**கிளை முகாமையாளர்**
தனஞ்சய ரத்னாயக்க
**உதவி முகாமையாளர்கள்**
வசந்த வெலிகெட்டிய
சஞ்சீவ முனசிங்க
**நிதிப் பிரிவு தலைவர்**
இந்திக அசேல
**வெளிக்கள முகாமையாளர்கள்**
அஜித் புஷ்பகுமார
நிரஞ்சன் செனரத்
**நிறைவேற்று உத்தியோகத்தர் IT**
ஏ.பி.கே. சமரநாயக்க
**சிரேஷ்ட வெளிக்கள நிறைவேற்று**
இந்திரஜித் குமார
**சிரேஷ்ட கணக்கு உத்தியோகத்தர்**
கசுன் பிரியங்க
**வெளிக்கள நிறைவேற்று உத்தியோகத்தர்கள்**
பண்டார ஏகநாயக்க
சாமர பண்டார
அபேசிங்க கலஹிட்டியாவ
சொம்ருவன் விக்ரமசிங்க
நிஷாந்த பண்டார
சத்துரங்க கருணாவர்தன
கயந்த குணதிலக
குமார ஜயரத்ன
ருவன் அவலங்க
சந்தருவன் தென்னக்கோன்
அஜித் வீரக்கோன்
பண்டார விதானகே
சுரங்க ரத்னாயக்க
**கணக்கு உதவியாளர்கள்**
விஜயகுமார்
மதுசங்க வேகடபொல
அமில பண்டார
**நிறைவேற்று உத்தியோகத்தர்கள் - சேமிப்பு**
குமார பண்டார
**நிறைவேற்று உத்தியோகத்தர் – சட்டம்**
குமார அபேரத்ன

எச்.என்.பி. கிராமின் பினான்ஸ் லிமிட்டெட்
இல. 677, வில்லியம் கோபல்லாவ மாவத்தை,
கண்டி
தொலைபேசி 0812217444
மின்னஞ்சல்
kandy@primegrameen.lk

ஆக்கம் - மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படப்பிடிப்பு லக்ஷ்மன் குமாரதுங்க


சுதத் விமலசூரிய
பிரதேச முகாமையாளர்


ரங்கன மல்லவராச்சி
பிரதேச கணக்காளர்


ஜனஞ்சய ரத்னாயக்க
கிளை முகாமையாளர்


வசந்த வெலிகெட்டிய
உதவி முகாமையாளர்


சஞ்சீவ முனசிங்க
உதவி முகாமையாளர்


இந்திக அசேல
கிளை
கணக்கு பிரதானி


அஜித் புஷ்பகுமார
வெளிக்கள
முகாமையாளர்


நிரஞ்சன் செனரத்
வெளிக்கள
முகாமையாளர்


எச்.என்.பி. கிராமின் நிறுவன கண்டிக்கிளை உத்தியோகத்தர்கள்

பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவனத்தின் அறிமுகப்படுத்தப்பட்ட சேமிப்புத் திட்டமான “யாலு” சிறுவர் சேமிப்பு கணக்கு, மியுலெஸி மகளிர் சேமிப்பு கணக்கு மற்றும் பிரைம் சேமிப்பு கணக்கு ஆகிய கணக்குகளும் எமது கிளையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அங்கத்தவர்களுக்கு நாளாந்தம் ஏற்படும் செலவுகளை ஈடு செய்வதற்கான உடனடியாக வழங்கப்படும் “நிவாரணக் கடன்” திட்டத்தின் கீழ் எமது அங்கத்தவர் பிள்ளைகளின் கல்வி செயற்பாட்டுக்கு தேவையான பணத்தைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டையும் செய்து வருகின்றோம். இதன் கீழ் கடந்த வருடத்தில் மாத்திரம் 62மில்லியன் ரூபா வரை நிவாரணக் கடன் வழங்கப்பட்டுள்ளது. அங்கத்தவர் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட அங்கத்தவர் மற்றும் கடன் பாதுகாப்பு நிதியத்தின் ஊடாக 40 பேருக்கு மரண நிதி மற்றும் இழப்பீட்டு நிதிக்காக கடந்த காலத்தில் 986,190ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கைத்தொழிலில் ஈடுபடுவதற்கு தேவையான பணத்தை கடனாக வழங்குவதுடன் எமது அங்கத்தவர்களுக்கு சிறப்பான சேவை செய்யவும் தொடர்ந்து செயற்பட்டு வருகிறோம். சுமாராக கூறுவதாயின் எமது அங்கத்தவர்களுக்காக பல்வேறு பயிற்சி கருத்தரங்குகளையும் கைத்தொழில் தொடர்பாக ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றோம். இதன் கீழ் கடந்த காலத்தில் மாத்திரமல்லாது தற்போதும் மத்திய நிலையங்களில் கைத்தொழிலில் ஈடுபட வேண்டிய துறைகள் தொடர்பாக ஒவ்வொரு வாரமும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

அவ்வாறே மத்திய நிலைய 170 தலைவிகளுக்காக செண்டர் லீடர் வேலைத்திட்டமொன்றும் நாம் அவர்களுக்காக ஏற்பாடு செய்தோம். இதற்கு மேலதிகமாக அங்கத்தவர் நலன்புரி சேவைக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வருகின்றோம். நிதித்துறையில் நாளாந்தம் மாற்றங்கள் இடம்பெறும் இக்காலகட்டத்தில் மிகவும் நம்பிக்கையானதும் சிறப்பானதுமான சேவையை எமது அங்கத்தவர்களுக்கு வழங்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

இன்று ஹட்டன் நஷனல் வங்கியுடன் இணைந்து செயற்படும் நிதி நிறுவனம் என்ற வகையில் முன்னர் இருந்ததை விட நிதிச் சேவையில் புதியனவற்றை அறிமுகப்படுத்தும் நிறுவனமாக பிரைம் கிராமின் மாற்றமடைந்துள்ளது. விசேடமாக சிறிய அளவில் ஈடுபடும் கைத்தொழிலாளர்களுக்காக புதிய நிதிச் சேவை பலவற்றை அவர்களுக்கு தேவையான வகையில் அறிமுகப்படுத்த எம்மால் முடிந்துள்ளது. அந்தக் கடன் திட்டத்துக்கு எமது வாடிக்கையாளர்கள் மத்தியில் நல்ல கிராக்கி காணப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன். சாதாரண கைத்தொழிலாளர்கள் உட்பட எமது அங்கத்தவர்களுக்கு மிகவும் இலகுவான மற்றும் சட்ட ரீதியான நிதிச் சேவை வழங்கி வளமான நாட்டை கட்டியெழுப்பும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட கிராமின் இலக்கை நிறைவேற்றுவதே எமது எதிர்பார்ப்பாகும்.

இல. 677, வில்லியம் கோபல்லாவ மாவத்தை, கண்டி
தொலைபேசி 0812217444
மின்னஞ்சல்
kandy@primegrameen.lk

## அட்டைப்பட விளக்கம்

# எமது தெரிவு உண்மையாக சரியானதே . . .



சுற்றுலா பயணங்களின் போது தவிர்க்க முடியாத இசைக்கருவிகளாக கொங்கோ அவ்வாறில்லையானால் பொங்கோவை நாம் குறிப்பிட முடியும். தென்னாபிரிக்க நாட்டின் இசைக்கருவியாக இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மிகவும் பிரபல்யமான இசைக்கருவி இன்று எமது நாட்டின் தேசிய உற்பத்தியாக அடையாளப்படுத்த முடியும். அவ்வாறான நிலையமொன்று கண்டி சுதுஹூம்பொலயைத் தாண்டி செல்லும் போது சகலரும் இனங்காணக்கூடியவாறு பாதையின் அருகில் காணப்படுகிறது. அதனைப் பார்த்துக் கொண்டு அந்த வழியாக செல்பவர்களில் நாங்களும் இருந்தோம். அதன் உரிமையாளர் பிரைம் கிராமின் அங்கத்தவர் என்பது கண்டி கிளையின் முகாமையாளர் எங்களிடம் தெரிவித்தவுடன் நாங்களும் வியப்படைந்தோம். அதன் பின்னர் நாம் அவரின் வியாபார நிலையத்துக்கு சென்று விற்பனை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொண்டோம். சுமார் 44 வருடங்களாக இந்த விற்பனையில் ஈடுபட்டு வருகின்றோம். இந்தப்பகுதியில் இரண்டு நபர்கள் மாத்திரமே இந்தத் தொழிலில் ஈடுபடுகின்றனர். இதனால் நாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து எங்களிடம் பொருட்களை வாங்குவதற்காக வருகை தருகின்றனர். கொங்கோ, ஜல்பட், விளக்கு, தப்பு, டிரன்கா பெட்டி ஆகிய உற்பத்திகளை நாம் செய்து வருகிறோம். எமது வியாபாரத்தை நடத்துவதற்கு நிதி தேவைப்படுகிறது. இதற்காக நாம் தெரிவு செய்த நிதி நிறுவனம் மைக்ரோ கிராமின். நாங்கள் தெரிவு செய்தது உண்மையாகவே சரியானதென நினைக்கிறோம். பல நிதி நிறுவனங்கள் காணப்பட்டாலும் அவற்றில் இல்லாத காருண்யம், இலகுவாக கடன் வழங்கும் திட்டம், நிதி நெருக்கடி ஏற்படும் போது உதவி செய்தல் போன்ற காரணங்களால் பிரைம் கிராமின் நிறுவனம் என்றும் முன்னணியில் திகழ்கின்றது எனலாம்.

எஸ்.எல். இந்திராவதி
விலியம் கோபல்லாவ மாவத்தை
சுதுஹூம்பொல,கண்டி



# உங்களுக்கு தெரியாத நான்



## கழுத்துப்பட்டி அணிந்து கொண்டு ஆடம்பர நாற்காலியில் அமர்ந்து தொழில் செய்ய வேண்டுமென்ற எண்ணம் மனதில் இருந்தது. . .

**சுதத் அசங்க விமலசூரிய**
**பிரதேச முகாமையாளர் கண்டி பிரதேசம்**

**முழுப் பெயர் :**
திஸாநாயக்க முதியான்சலாகே சுதத் அசங்க விமலசூரிய

**பிறந்த திகதி:** 1982.02.02

**நீங்கள் கல்விகற்ற பாடசலைகளில் விருப்பமான பாடசாலை:**
நான் முதலாம் தரத்தில் இருந்து உயர் தரம் வரை மாத்தளை, விஜய தேசியப் பாடசாலையில் கல்வி கற்றேன். எனது அம்மாவும், அப்பாவும் அதே பாடசாலையில் தான் கல்வி கற்றார்கள். அந்தப் பாடசாலையில் எவ்வித குறைபாடுகளும் இன்மையால் நான் தொடர்ந்து அதே பாடசாலையில் கல்வி கற்றேன். நான் பாடசாலையில் விளையாட்டுத் துறையிலும், கெடட் அணியிலும், விவாதக் குழுவிலும் அங்கத்தவராக இருந்துள்ளேன்.

**பாடம்:**
எனக்கு சித்திரப் பாடம் மிகவும் பிடித்தமான பாடமாகும்

**விளையாட்டு:**
தரம் ஆறு முதல் பத்தாம் ஆண்டு வரை ஹொக்கி அணியில் இருந்தேன். பாடசாலைக்களுக்கிடையிலான போட்டிகளில் நாங்கள் பல வெற்றிகளைப் பெற்றோம்.

**பாடசாலைக் காலத்தின் போது எதிர்கால இலட்சியமாக காணப்பட்டது:**
பாடசாலைக்காலத்தில் இந்தத் தொழிலில் தான் ஈடுபட வேண்டுமென்ற எண்ணம் இருக்கவில்லை. கழுத்துப்பட்டி அணிந்து கொண்டு ஆடம்பர நாற்காலியில் அமர்ந்து தொழில் செய்ய வேண்டுமென்ற ஆசை மனதில் இருந்தது

**முதல் தொழிலை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட அனுபவம்:**
உயர்தரம் கற்ற பின்னர் நான் வீட்டில் வீனாக பொழுதை கழிக்கக்கூடாது என்பதற்காக செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தில் பயிலுனர் உத்தியோகத்தராக தொழில் புரிந்தேன். நான்கு மாதங்களுக்குப் பிறகு எனக்கு இலக்கொன்று நிர்ணயித்தார்கள். நான் அதனையும் சிறப்பாக செய்து காட்டினேன். இந்த சந்தர்ப்பத்தில் என்னை நிரந்தர ஊழியராக நியமிக்க தீர்மானித்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் 2003ஆம் ஆண்டு கிராமின் மாத்தளை கிளை ஆரம்பிக்கப்பட உள்ள செய்தி எனக்கு கிடைத்தது. அதற்கு நானும் விண்ணப்பித்தேன். எனக்கு நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு அழைப்புக் கடிதம் வந்தது. நேர்முகப் பரீட்சை காலை 8.00 மணிக்கு கிருலப்பனையில் நடைபெற்றது.

ஆக்கம்
மஞ்சுள ஹெட்டியாராச்சி

எனக்கு கொழும்பு பற்றி அவ்வளவு பரீட்சயமில்லை. இதனால், கிருலப்பனை முகவரியை அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் அலைந்த திரிந்து காலை 11.30 மணிக்கே நேர்முகப் பரீட்சைக்கு செல்ல வேண்டியதாயிற்று. நேர்முகப்பரீட்சையின் பின்னர் முதலில் என்னை மொரட்டுவை கிளையில் பயிற்சி உத்தியோகத்தராக நியமித்தார்கள். பயிற்சியின் பின்னர் மாத்தளையில் வெளிக்கள முகாமையாளராக இணைந்து கொண்டேன்.

**கிராமின் நிறுவனத்தில் மறக்க முடியாத சம்பவங்கள் :**
2004ஆம் ஆண்டு அந்த சம்பவம் இடம்பெற்றது. அப்போது கிராமின் வாசனா என்ற சீட்டிலிப்பு நடைபெற்றது. அங்கத்தவர்கள் பெரும்பாலனவர்கள் இதில் கலந்து கொண்டார்கள். சீட்டிலிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது திடீரென மின்சாரம் தடைப்பட்டது. அப்போது எங்களால் ஒன்றும் செய்ய முடியாது போய்விட்டது. எம்மிடம் ஜெனரேட்டரும் இருக்கவில்லை. உடனே வாகனத்தில் ஏறி வெளியில் சென்று ஜெனரோட்டர் ஒன்றை வாடகைக்கு எடுத்து வந்தோம். இந்த சம்பவத்தை மறக்க முடியாது.

ஏனெனில் அவ்வளவு பெரிய ஜெனரேட்டரை வாகனத்தில் பின்னால் இருந்து ஒரு கையில் தொடர்ச்சியாக பிடித்துக் கொண்டு வந்தேன். நாங்கள் செய்த வேலையைப் பார்த்து எல்லோரும் மகிழ்ச்சியடைந்தார்கள். எனினும் எனக்கு அந்த சம்பவத்தை நினைக்கும் போது எனது கரங்கள் இன்றும் வலியாக இருக்கின்றது.

**வாழ்க்கையில் சந்தோஷமான நிகழ்வும் துக்கமான தினமும்:**
2013 ஜுன் மாதம் நான் எனது பெயரில் கார் ஒன்றை கொள்வனவு செய்தேன். அதுவும் எனது பல நாள் கனவுகளில் ஒன்றாகும். இது மிகவும் சந்தோஷமான சம்பவமாகும். எனது வாழ்வில் என்றும் மறக்க முடியாத துக்கமான சம்பவமாக எனது தந்தையின் மறைவாகும். அது 2014ஆம் ஆண்டிலாகும். எனது தந்தை ஆறு மாதங்கள் உண்ணாமல், உறங்காமல் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வந்தார். எமது தலைமையகத்தில் கூட்டமொன்றில் பங்குபற்றுவதற்காக கொழும்பிற்கு வந்த போது எனது தந்தையின் மரணச் செய்தி கிடைத்தது.
எனது வாழ்க்கையின் முன்னோடியாக திகழ்ந்த தந்தையின் மறைவு மறக்க முடியாத ஒன்றாகும். ஏனெனில் எனது தந்தை எனக்கு ஆசானாகவும், நண்பராகவும் இருந்து என்னை விட்டு பிரிந்தமை எனது வாழ்வில் என்றும் மறக்க முடியாத துக்கதினமாக கருதுகிறேன்.

**பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் அதனை உயர்மட்டத்தில் நிறைவேற்றுவது முக்கியமாகும்**



மற்றவர்கள் எம்முடன் சரிசமாக இருக்க வேண்டுமென நினைக்கும் பண்பு என்னிடம் இருக்கிறது. அவ்வாறே எவ்வகையான பிரச்சினைகள் வந்தாலும் அதனை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளும் தன்மையை வளர்த்துக் கொள்ள நினைக்கிறேன்.

**உங்கள் வாழ்க்கையில் முன்னோடியாக கருதும் நபர் அல்லது அவள்:**
எனது தந்தையும் தாயும். அவர்கள் எமது வாழ்க்கையில் கற்றுக் கொடுத்தவை பல உள்ளன. நாளாந்த வாழ்க்கையில் தோல்வியடையும் போது பாடப்புத்தகத்தை திருப்பி பார்ப்பது போல அவர்களின் முன்மாதிரி எமக்கு நல்ல அனுபவங்களை பெற்றுக் கொடுத்தது.
உங்களுடைய முதல் காதல் உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கம்:
பாடசாலையில் 10ஆம் ஆண்டில் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது எமது வகுப்புக்கு கீழ் நிலையில் இருந்த ஒரு மாணவி எனக்கு காதல் கடிதம் தந்தாள். அந்தக் கடிதம் எனக்கு வழங்கப்பட்டமை குறித்து எமது வகுப்பாசிரியர் தெரிந்து கொண்டார் என்று நான் அறிந்து கொண்டேன். நான் அந்தக் கடிதத்து பதிலாக வேறொரு கடிதமொன்றை தயாரித்து வகுப்பாசிரியரிடம் கொடுத்துவிட்டேன். அந்தக் கடிதத்தில் அந்த மாணவி என்னை தூற்றுவது போல் எழுதியிருந்தேன். இதனால், அந்த விடயம் அன்றே நிறைவு பெற்றுவிட்டது. நானும் அன்றிலிருந்து அந்த விடயத்தை மறந்து விட்டேன். விருப்பமின்றி ஏற்றுக் கொண்ட அந்த காதல் இறுதியில் திருமணத்தில் நிறைவு பெற்றது. அவள் நெத்மி ஹேரத்.

**அவளிடத்தில் காணப்படும் விசேட குணங்கள்:**
அவளின் நேர்மை என்னை மிகவும் கவர்ந்தது. அழகானவள். எனக்கு இப்போது மகன் ஒருவர் இருக்கிறார். அவருக்கு தற்போது 10 வயது.

**உங்கள் வாழ்க்கையில் திருப்பமாக கருதுவது (Turning Point)**
நான் செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தில் தொழில் புரிந்து கொண்டிருந்த போது பொலிஸில் வேலைக்கும் விண்ணபத்திருந்தேன். அப்போது மாத்தளை மேயரையும் எனக்கு நன்கு தெரியும். அவருடைய தொடர்புடன் ஜோன் அமரதுங்க அமைச்சரை சந்தித்து பொலிஸ் சார்ஜனாக இணைய இருந்தேன். அப்போது பொலிஸ் சார்ஜனாக இணைவதற்கான கடிதமும், பிரைமின் கிராமின் நிறுவனத்திற்கான இணைவதற்கான கடிதமும் ஒரே நேரத்தில் கிடைத்தது. என்ன காரணத்திற்காக பொலிஸ் தொழிலை கைவிட்டு பிரைம் கிராமின் தொழிலை தேர்ந்தெடுத்தேன் என்று தெரியவில்லை. இதன் மூலம் வறுமையில் உள்ள பலருக்கு உதவுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கிராமின் ஊடாக வீடில்லாமல் இருந்த பன்னிரண்டுக்கும் மேற்பட்டோருக்கு வீடமைப்பதற்கான உதவிகளை செய்ய முடிந்துள்ளது. சரண நிதி உதவி திட்டம் உட்பட மெஹெவர நிதி திட்டத்தின் கீழ் நோயினால் துன்பப்படும் பலருக்கு உதவிகளை செய்ய முடிந்துள்ளது. இதன் மூலம் எமது வாழ்க்கையும் சிறப்பாக அமைந்துள்ளதுடன் பலருக்கு உதவி செய்கிறோம் என்ற திருப்தியுடன் வாழ்க்கையை முன்னெடுக்கக்கூடியதாக உள்ளது. இவ்வாறு சமூக சேவை செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தமையை இட்டு நான் தெரிவு செய்த கிராமின் தொழில் சரியானது என்பதை தற்போது உணர்கிறேன்.

**நீங்கள் தெரிவு செய்யும் விருப்பமான காலமும் அதற்கான காரணமும்:**
மீண்டும் பாடசாலை காலத்திற்கு செல்லவே விரும்புவேன். எனது பாடசாலைக்காலத்தில் வீட்டில் இருந்ததைவிட அம்மம்மாவின் வீட்டில் இருந்ததே அதிகமான நாட்களாகும். ஏனெனில் எனது தாயார் அடிக்கடி வெளிநாடுகளுக்கு சென்றமையால் சிறு பராயத்தில் எமது கல்வி செயற்பாடுகளை சரியாக கற்றுக் கொடுக்க யாரும் இருக்கவில்லை. இதனால், கல்வியின் மகிமை எமக்கு தெரியவில்லை. இதனால், பாடசாலையின் முக்கியத்துவத்தை அடையாளம் கண்டு எமது பிழைகளை திருத்திக் கொண்டு வாழ்க்கையில் இதனைவிட நல்லதொரு வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

**மாற்றியமைப்பதற்கான சந்தர்ப்பம் ஒன்று உருவாகினால் உங்களிடம் காணப்படும் குறைபாடுகள்:**
நான் பிழை செய்ய பயப்படுபவன். எந்த சந்தர்ப்பத்திலும் என்னுடன் இருப்பவர்கள் நன்றாக இருக்க வேண்டுமென்று நினைப்பவன். நானும் அவ்வாறே தொழில் செய்து வருகிறேன். இதற்காக பல தியாகங்களை செய்துள்ளேன். இதனால், பல சந்தர்ப்பங்களில் எனக்கு தோல்வியும், பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன. இன்று வரை அதனை சரி செய்து கொள்ள முடியவில்லை.

**உங்களிடம் காணப்படும் விசேட குணாம்சங்களாக கருதுவது :**

நீங்கள் வாழ்க்கையில்

**திருப்தி அடைந்துள்ளீர்களா? இல்லாமல். . .**
சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனிதராகவும் எவருக்கும் எவ்வித கஷ்டமும் கொடுக்காத வாழ்க்கை கிடைத்தமை தொடர்பில் நான் சந்தோஷப்படுகிறேன். இதற்கு மேலதிகமாக எமக்க என்ன வேண்டும்?

**உங்களுக்கு பிடித்த பாடகர்:** குணதாஸ கபுகே

**பாடல்:** தவசக் பெல நெதி கேனே


**திரைப்படம்:** ரம்போ

**நாவல்:** மொஹமட் யூனுஸ் அவர்களின் வறுமை மக்களின் புத்தகம் எமது தொழிலுடன் நேரடியான தொடர்பை கொண்டது.

**எதிர்கால இலட்சியம்:** யாருக்கும் எவ்வித கஷ்டமும் கொடுக்காமல் சமூகத்திற்கு நன்மை பயக்கும் வாழ்க்கையாகும். தொழிலில் இருந்து இளைப்பாறியவுடன் எனக்கென்று ஒரு சிறிய வியாபாரமொன்றை ஆரம்பிக்கலாம் என்று எதிர்பார்க்கிறேன்.



## துசார - திலினி தம்பதிகளுக்கு சுபமங்களம்





எச்.என்.பி. கிராமின் பினான்ஸ் லிமிட்டெட் ஹொரன கிளையின் உதவி முகாமையாளரான திலங்க துஸார ரத்னாயக்க அவர்கள் கடந்த ஏப்ரல் 06ஆம் திகதி திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார். அவருடன் கரம்பிடித்த மணமகள் திலினி மதுசாந்தியாகும். எச்.என்.பி. கிராமின் பினான்ஸ் லிமிட்டெட் பணிப்பாளர் சபை உட்பட காரியாலய உத்தியோகத்தர்கள் தமது அன்பான வாழ்த்துக்களை திலங்க, திலினிக்கு தெரிவித்துக் கொள்கிறார்கள்.

## Micro Finance எண்ணக்கரு சிறப்பு பார்வை

### மைக்ரோ கிரடிட் முறையின் ஆரம்பமும் நடைமுறையும் பகுதி 7

# கடன் வட்டம்



பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத் அவர்களுடனான நேர்காணலை கீழே தருகின்றோம்


நபர் ஒருவர் கடன் ஒன்றை பெறுவது முதல் திருப்பி செலுத்தும் வரையிலான செயற்பாடுகள் வெளிப்படையாக காணப்பட்டாலும் அந்த செயற்பாட்டை செய்வது மிகவும் இலகுவான விடயமென்று கூற முடியாது. கடன் பெறுவது முதல் கடனை திருப்பி செலுத்துவது வரை பல்வேறு கட்டங்கள் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய சுற்றறிக்கையைப் போன்று பயணிக்கும் முறையாக இந்த கடன் செயற்பாட்டை குறிப்பிட முடியும். இவை பல்வேறு படிமுறைகளாக முன்னெடுக்கப்படலாம். அந்தப் படிமுறைகளை ஆறு வகையாக நாம் பிரித்து பார்க்க முடியும்.

1. விண்ணப்பித்தல்
2. மதிப்பிடுதல்
3. தீர்மானித்தல்
4. நிர்வாகம்
5. பரிசோதனை செய்தல்
6. கடன் வழங்குவதை முகாமைத்துவம் செய்தல் (வரைபடம் 01)

இந்த கடன் வட்டம் தொடர்பில் அறிந்து கொள்வதற்கு முதல் கடன் வழங்குவதில் உள்ள சிக்கல்கள் தொடர்பில் அறிந்து கொள்ள ஓர் எடுத்துக்காட்டை உங்களுக்கு தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன்.

கமலா கிராமத்தில் வாழ்ந்த ஒரு பெண். ஆவள் தனது நண்பியிடம் பெற்ற கடனை செலுத்துவதற்காக கிராமத்தில் இருந்த இருவரிடம் வட்டிக்கு பணத்தைப் பெற்றுள்ளார். கணவருக்கு தெரியாமல் இந்த கடனைப் பெற்றுக் கொண்ட கமலா, இந்தக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கணவருக்கு தெரியவந்துள்ளது. குமலாவிடம் இது தொடர்பில் வினவிய கணவர், கமலாவுக்கு எச்சரித்துவிட்டு, கடன் பெற வேண்டுமென்றால் ஏதாவது வங்கியொன்றில் கடன் பெறுமாறு அறிவுறுத்தி யுள்ளார். இதன்பிறகு கணவரின் அனுமதியுடன் உடனடியாக நகரில் இருந்த வங்கியொன்றுக்கு சென்று கடனுக்கு விண்ணப் பித்துள்ளார். வங்கிக்கு சென்ற கமலா கடன்பிரிவுக்கு பொறுப்பான உத்தி யோகத்தரை சந்தித்து அவசரமாக பணம் தேவைப்படுவதாக கூறியுள்ளார். நீங்கள் இதற்கு முன்னர் வங்கியில் கடன் பெற்றுள்ளீர்களா என அந்த அதிகாரி கேட்டவுடன் தான் இதற்கு முன்னர் கடன் பெறவில்லை என்று கூறியுள்ளார். எதற்காக கடன் வேண்டுமென அவர் வினவிய போது தான் இரண்டு பசுமாடுகளை வாங்கவிருப்பதாக கூறியுள் ளார். கமலாவின் பதிலை கேட்ட அவர் சந்தோஷ மடைந்த அவர், நிதி நிறுவனம் இரண்டு அடிப்படையில் கடன் வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார். நீண்டகால மற்றும் குறுங்கால கடன் வழங்கும் முறைகள் காணப்படுவதாகவும் குறுங்கால அடிப்படையில் 10,000 ரூபா கடன் பெற்றுக் கொள்ள முடியுமென்பதுடன் இந்தக் கடனை ஒரு வருட காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டுமெனவும் கூறியுள்ளார். கமலாவின் விருப்பத்துடன் அந்த அதிகாரி கடன் விண்ணபத்தை வழங்கினார். விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட அவர் தமது நிறுவனத்தில் இருந்து ஒரு குழுவினர் கமலாவின் வீட்டுக்கு வருகை தருவார்கள் என்றும் அந்தக் குழு கடன் வழங்குமாறு சிபாரிசு செய்தால் கடன் வழங்கப்படும் என்று கூறியுள்ளார். கடனை சிபாரிசு செய்யும் குழு என்னவென்று தெரியாத கமலா, அவருக்கு தெரிந்த எவரோனும் இருப்பார்கள் என்று நினைத்து அங்கிருந்து சென்றுவிட்டார். இது தொடர்பில் மேலும் அறிந்து கொள்வதற்காக கடன் சிபாரிசு குழுவில் யார் இருப்பார்கள் என்று அந்த அதிகாரியிடம் வினவினார். அதற்கு அந்த அதிகாரி குறிப்பிட்ட விடயம்தான், கடன் வழங்கும் குழுவில் அவருக்கு தெரியாதவர்களே வருகை தருவார்கள் என்றும் கூறியுள்ளார். தாம் இதற்கு முன்னர் சந்தித்திராத குழுவொன்று தமக்கு எவ்விதம் கடன் வழங்குமொன்று அவர் சிந்தித்தார்.

இந்த எடுத்துக்காட்டின் மூலம் கடன் பெறுவதும் கடன் வழங்குவதும் சிக்கலான விடயமென்பது எமக்கு புலப்படுகிறது. உண்மையாகவே, கடன் வழங்கும் போது கடனைப் பெறுபவரும் கடனை வழங்குபவருக்கிடையிலான வெளிப்படைத் தன்மை எவ்வாறானது – கடன் வழங்கும் நிறுவனத்தின் நிபந்தனை, அதன் வட்டி வீதம் கடன் பெறுபவரினால் கடனை திருப்பிச் செலுத்துவதில் தாக்கம் செலுத்தும் என்பதை கடன் பெறுபவரிக்கு வெளிப்படுத்த வேண்டும். குடன் பெறும் நபர் தான் தொடர்பாகவும் தான் எதற்காக கடன் பெறுகிறேன் என்பதை கடன் வழங்கும் நிறுவனத்துக்கு தெரிவிக்க வேண்டும். இந்த விடயம் உண்மையாக இருக்க வேண்டும். இரு நபர்களுக்கிடையிலான அந்நியோன்ய தொடர்பு மற்றும் நம்பிக்கை கடன் வட்டத்தை முழுமைப்படுத்துவதற்கு மிகவும் இன்றியாத ஒன்றாக காணப்படுகிறது. குடன் வட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஆறு விடயங்கள் தொடர்பில் அடுத்த வார இதழில் ஆழமாக குறிப்பிட உள்ளோம்.




(வரைபடம் 01)


## பிரைம் கிராமின் எச்.என்.பி. கிராமினாக பெயர் மாற்றம்

பிரைம் கிராமின் நிறுவனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 17ஆம் திகதி பிரைம் கிராமின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. பிரைம் கிராமின் நிறுவனத் தலைவர் ஜொனதன் அலஸ் அவர்களின் தலைமையில் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் கலந்து கொண்ட இந்த பொதுக்கூட்டத்தில் விசேட அம்சமாக பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் என்ற பெயரில் செயற்பட்டு வந்த நிறுவனம் எச்.என்.பி. வங்கியுடன் இணைந்து இனிவரும் காலங்களில் எச்.என்.பி. கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட் என மிகவும் வலுவான நிதி நிறுவனமாக சேவையை தொடர்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.





## HNB GRAMEEN Diary



2015 ஜூன்
எச்.என்.பி. கிராமின் பணிப்பாளர் சபைக்கு புதிய பணிப்பாளர்கள் இருவர் நியமிக்கப்பட்டனர்.
2015 ஜூன் மாதத்தில் இருந்து எச்.என்.பி. கிராமின் பணிப்பாளர் சபைக்கு புதிய சுயாதீன பணிப்பாளர்களாக கலாநிதி எஸ்.யு.எச். பெர்ணாந்து மற்றும் ஏ.எஸ்.விஜேசிங்க ஆகிய இருவர் நியமிக்கப்பட்டனர்.

03.06.205
எச்.என்.பி. கிராமின் களுத்துறை கிளையின் தன்சல எச்.என்.பி. கிராமின் களுத்துறை கிளை உத்தியோகத்தர்களின் அனுசரணையில் கடந்த ஜூன் மாதம் 03ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு களுத்துறை கிளைக்கு அருகில் ஐஸ்கிரீம் தன்சல் வழங்கப்பட்டது.



**29.06.2015**
**பிரைம் கிராமின் நான்காண்டு நிறைவை முன்னிட்டு . . .**







பிரைம் கிராமின் நிறுவன நான்காண்டு நிறைவை கொண்டாடும் வகையில் ஜூன் மாதம் 29ஆம் திகதி நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள பிரைம் கிராமின் கிளைகளிலும் தலைமைக் காரியாலயத்திலும் பல்வேறு சமய அனுஷ்டானங்கள் நடைபெற்றன. இந்நிகழ்வுகளில் தலைமைக்காரியாலயத்திலும் களுத்துறை கிளையிலும் நடைபெற்ற சமய நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

30'06'2015
பதுளை பிரதேச கிரிக்கட் போட்டியில் வெலிமடைக்கு வெற்றி
எச்.என்.பி. கிராமின் பினான்ஸ் லிமிட்டெட் ஊழியர் நலன்புரி சங்கத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் கிளை அங்கத்தவர்களுக்கிடையிலான கிரிக்கட் சுற்றுப் போட்டியின் பிரதேச அணிகளுக்கிடையிலான போட்டி கடந்த வாரம் நடைபெற்றது. இதில், பதுளை பிரதேசத்தில் நடைபெற்ற போட்டியில் எச்.என்.பி. கிராமின் வெலிமடை கிளை அணி வெற்றி பெற்றது.



கிண்ணங்களுடன் வீரர்களை படத்தில் காணலாம்.

## HNB GRAMEEN “மெஹெவர” உதவி நிதியிலிருந்து நன்மை பெற்றவர்கள். . .

பணக் கொடுக்கல் வாங்கல், இலாப நட்டம் போன்ற வார்த்தைகள் வர்த்தக செயற்பாடுகளில் நாளாந்தம் உச்சரிக்கப்படும் வார்த்தைப் பிரயோகங்களாகும். வியாபாரமொன்றை நடத்துவதற்கு அவ்வாறில்லையானால், நாளாந்த வர்த்தக செயற்பாடுகளில் இந்த வார்த்தைப் பிரயோகங்களுக்கு அப்பால் சென்று அங்கத்தவர்களின் நலன்களுக்காக செயற்படும் ஒரு நிறுவனம் காணப்படுமாயின் அவ்வாறான அனுபவங்களை எம்மால் நினைத்துப் பார்க்கும் போது . . . வாழ்க்கையில் துன்பமடைந்த மக்களுக்கு உதவிகளை வழங்கும் போது உள்ளார்ந்த ரீதியில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. மெஹெவர உதவி நிதியம் மனிதர்களுக்கு உதவும் நோக்கத்துடனேயே ஆரம்பிக்கப்பட்டது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.
பிரைம் கிராமின் கிளை உத்தியோகத்தர்களினதும் கிளை அங்கத்தவர்களின் நன்கொடையினாலும் ஆரம்பிக்கப்பட்ட மெஹெவர உதவி நிதியம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் எமக்கு கிடைக்கப் பெற்ற நூற்றுக்கணக்கான விண்ணப்பங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கு கடந்த ஜூன் மாதம் 172,700 ரூபா நிதியை உதவித்தொகையாக வழங்கப்பட்டது. இவ்விதம் உதவிகள் வழங்கப்பட்டவர்களின் விபரங்களை கீழே தருகின்றோம்.

**01. குருநாகலை கிளை**
அங்கத்தவர்:- ஆர். செல்வி
உதவி பெற்றவர்:- ஏ.ஏ. பிள்ளை (கணவர்)
உதவி பெற்ற காரணம்: சத்திரசிகிச்சையின் மூலம் ஒரு பாதம் அகற்றப்பட்டமையால் சக்கர நாட்காலி வாங்குவதற்கு



**02. நாவலப்பிட்டி கிளை**
அங்கத்தவர்: பீ.ஜீ. சமிலா
உதவிப்பெற்றவர்: பீ.ஜீ. சமிலா (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: கடும் காற்று மழையினால் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்தமை



**03. நிக்கவரெட்டி கிளை**
அங்கத்தவர்: டபிள்யு.ஏ.சந்ராவதி
உதவிப்பெற்றவர்: டபிள்யு.ஏ.சந்ராவதி (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய சிகிச்சைக்காக



**04. நிக்கவரெட்டி கிளை**
அங்கத்தவர்: பீ.எச். சந்திரிகா
உதவிப்பெற்றவர்: என்.பீ.எச். சந்திரிகா (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய செலவுக்கு



**05. நீர்கொழும்பு கிளை**
அங்கத்தவர்: பீ.ஏ.என். நிரோஷினி
உதவிப்பெற்றவர்: ஹேரத் (கணவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய செலவுகளுக்காக



**06. நீர்கொழும்பு கிளை**
அங்கத்தவர்: கே. லிலி மார்கிரட்
உதவிப்பெற்றவர்: கே. லிலி மார்கிரட் (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய செலவுக்காக



**07. வென்னப்புவ கிளை**
அங்கத்தவர்: எம்.எம். சமந்தி
உதவிப்பெற்றவர்: எம்.எம். சமந்தி (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய செலவுக்காக



**08. மொரட்டுவை கிளை**
அங்கத்தவர்: பீ.ஏ. ரஞ்சனி
உதவிப்பெற்றவர்: டபிள்யு.ஏ. ரவீன் (மகன்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய சிகிச்சைக்காக



**09. வெலிமடைக் கிளை**
அங்கத்தவர்: எச்.ஏ.எஸ். ஹிமாலி
உதவிப்பெற்றவர்: எச்.ஏ.எஸ். ஹிமாலி (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய சிகிச்சைக்காக



**10. வத்தளை கிளை**
அங்கத்தவர்: கே.ரி. மாரி
உதவிப்பெற்றவர்: கே.ரி. மாரி (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய சிகிச்சைக்காக



**11. எம்பிலிபிட்டி கிளை**
அங்கத்தவர்: கே.எஸ். அனோஜா
உதவிப்பெற்றவர்: கே.எஸ். அனோஜா (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய சிகிச்சைக்காக



மெஹெவர உதவி நிதியம் இன்னும் சிறப்பாக செயற்படுவதற்கு உங்களது ஆக்கபூர்வமான யோசனைகளை உள்வாங்கப்படுவதுடன் உங்களுடைய கருத்துக்களை 0710292018 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு சுதேஷ் பெரேரா என்பவருக்கு அனுப்பி வைக்கவும்.

பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவன ஊழியர்களின் நலன்புரி சங்கத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் கிளை அங்கத்தவர்களுக்கிடையிலான கிரிக்கட் போட்டியில் தலைமைக் காரியாலய அணிகளின் போட்டி கடந்த ஜுன் மாதம் 20ஆம் திகதி தெஹிவளை எஸ்.த.எஸ். ஜயசிங்க மைதானத்தில் நடைபெற்றது. பத்து அணிகள் பங்குபற்றிய இச்சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டியில் நிதிப் பிரிவு அணி வெற்றி பெற்றது. இரண்டாமிடத்தை நிர்வாகப் பிரிவு பெற்றுக் கொண்டதுடன் போட்டியின் விறுவிறுப்பான கட்டங்களை எமது புகைப்படக் கலைஞர் இவ்விதம் படம் பிடித்துள்ளமையை காணலாம்.

படம்- பத்மகுமார / சமிந்த







# நுண் நிதி நிறுவனங்களின் களியாட்டவிழாவில் சிறந்த படைப்பாக்கத்துக்கான விருது எச்.என்.பி. கிராமினுக்கு

த பைனான்சியல் ஹவுஸ் ஒப் ஸ்ரீ லங்காவினால் நடத்தப்பட்ட உள்ளூர் நிதி நிறுவனங்களின் களியாட்ட விழா கடந்த ஜுலை மாதம் 11ஆம் திகதி முழு நாளும் கொழும்பு புளும்பீல்ட் மைதானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் த பைனான்சியல் ஹவுஸ் ஒப் ஸ்ரீ லங்கா அமைப்பில் அங்கத்துவம் பெற்ற நிதி நிறுவனங்கள் பல கலந்து கொண்டன.

கிரிக்கட், கரப்பந்து, வலைப்பந்து, றகர் ஆகிய விளையாட்டுப் போட்டிகளும் நுண்நிதி நிறுவனங்களின் அழகுராணியும் (FHA queen) போட்டியும், சிறந்த படைப்பாக்கத்தை தெரிவு செய்யும் போட்டியும் நடைபெற்றமை விசேட அம்சமாகும். ஏச்.என்.பி. கிராமின் பைனான்ஸ் நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட அழகிய கொட்டிலுக்கான விருதை பெற்றுக் கொண்டமை சிறப்பம்சமாகும். நிதி நிறுவனங்களுக்கிடையில் அந்நியொன்ய புரிந்துணர்வை கட்டியெழுப்பும் நோக்கில் இந்த போட்டி களியாட்ட நிகழ்வு சிறப்பாக நடைபெற ஒத்துழைத்தமைக்காக எச்.என்.பி. கிராமின் பைனான்ஸ் நிறுவனம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் வெற்றி பெற்ற சகோதர நிறுவனங்களுக்கும் போட்டியில் பங்குபற்றிய வெற்றியாளர்களுக்கும் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.










# வர்த்தக அலுவல்கள் மற்றும் அதனுடன் இணைந்த சேவைகள்

பாகம் 18

நிறுவனமொன்றில் பல்வேறு திட்டமிடல்கள் காணப்படலாம். அவற்றை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

01. நீண்டகால அடிப்படையில் செயற்திறனான திட்டமிடல் (Strategic Plan)
ஒரு நிறுவனத்தின் அல்லது அதன் இலக்கு மற்றும் உற்பத்தியை நோக்கி நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்தை இது குறிக்கும். இச்செயற்பாடானது உயர் பதவியில் இருக்கும் முகாமையாளர்களின் பங்களிப்புடன் திட்டமிடப்படும். ஒரு வருடத்திற்கும் மேலான காலப்பகுதியைக் கொண்டிருக்கும். நீண்டகால திட்டமாக ஆரம்பிக்கப்படும். நோக்கு மற்றும் இலக்கு என்பன இதில் தீர்மானிக்கப்படும்.

தொடர்பிலான நீண்டகால திட்டங்களாக இதனை கூற முடியும்.
குறுங்கால திட்டம் (Short Term Plan)
ஒரு வருடத்திற்கும் குறைவான திட்டங்களை குறுங்கால திட்டங்கள் என அறிமுகப்படுத்த முடியும்.

03. நிகழக்கூடிய அடிப்படையில் (Specificity)
அறிவுறுத்தல் திட்டமிடல் (Directional Plan)
சாதாரண மற்றும் பொதுவான வழிமுறையுடனான திட்டமிடலைக் குறிக்கும். இதில் இலக்கு காணப்பட்டாலும் அதனை சரியாக குறிப்பிட முடியாது. உதாரணமாக அடுத்த 05 வருடத்தில் நிறுவனத்தின் விற்பனை 10%-25% வீதமாக அதிகரிக்க வேண்டுமென உத்தேசிக்கும் திட்டமாகும்.
நிகழக்கூடிய திட்டம் (Specific Plan)
நோக்கத்தை சரியாக குறிப்பிடக்கூடிய திட்டமென அறிமுகப்படுத்த முடியும். இது உள்ளடக்கும் வகையில் நடைமுறைப்படுத்தும் திட்டமாக இதனைக் கூறலாம். இவை மீண்டும் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும்.

05. திட்டமிடலின் செயற்பாட்டு படிமுறை (Steps in the Planning Process) திட்டமிடல் செயற்பாட்டு படிமுறை ஒன்பது கட்டங்களைக் கொண்டது. அவையாவன,

01. திட்டமிடலை அடையாளப்படுத்தல் (Goal Formulation)
02. நோக்கு மற்றும் செயற்திறனை அறிமுகப்படுத்தல் (Identification of current objectives & Strategy)
03. சூழலை பகுப்பாய்வு செய்தல் (Environment Analysis)
04. வளங்களை பகுப்பாய்வு செய்தல (Resources Analysis)
05. சந்தர்ப்பம் மற்றும் இடையூறுகளை அறிந்து கொள்ளல்
06. இடைவெளியை பகுப்பாய்வு செய்தல் (Gap Analysis)
07. செயற்திறனை தொடர்பில் தீர்மானம் எடுத்தல் (Strategic Decision Making)
08. செயற்திறனை நடைமுறைப்படுத்தல் (Strategic implementation)
09. நிர்வாகம் மற்றும் செயற்திறனை அளவீடு செய்தல் (Measurement and Control of Progress)




## நிறுவனமொன்றின் சேமிப்பை தீர்மானிக்கும் திட்டமிடல் வகை (Types of Plan)

செயற்பாட்டுத்திட்டம்
நோக்கு மற்றும் இலக்கை அடைவதற்கான முறைகள் தொடர்பாக சரியான தகவல்களை வெளிப்படுத்துவதே செயற்பாட்டுத் திட்டமாகும். செயற்பாட்டுப் முகாமையாளரினால் நடைமுறைப்படுத்தப்படும். குறுகிய காலத்தில் நிறைவேற்றப்படக்கூடியது. மாதாந்தம், வாராந்தம் மற்றும் நாளாந்தம் மேற்கொள்ளும் செயற்பாடுகள் இந்த திட்டத்தில் உள்ளகப்படும். நோக்கு மற்றும் இலக்கை அடைவதற்கான முறைகள் நடவடிக்கைகள் தொடர்பில் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.'

02. காலத்தின் அடிப்படையில் (Time Frame)
நீண்டகால திட்டம் (Long Term Plan)
ஒரு வருடத்திற்கும் கூடுதலான திட்டங்கள் எந்தவொரு நிறுவனமும் அடுத்தாண்டில் தனது விற்பனையை 25வீதமாக அதிகரிப்பதை நோக்காகக் கொண்டு திட்டமிடல்களை செய்வதை உதாரணமாக கூறலாம்.

04. அடிக்கடி ஏற்படக்கூடிய அடிப்படையில் (Frequency of Use)
ஒரு தடவை மாத்திரம் செயற்படுத்தும் திட்டம் (Single Use Plan)
ஒரு தடவை மாத்திரம் செயற்படுத்தும் திட்டமாக இதனை அறிமுகப்படுத்தலாம். அவ்வாறாயின் ஏதாவது விசேட திட்டமொன்றை செயற்படுத்துவதற்காக மாத்திரம் உருவாக்கப்படும் திட்டங்களை குறிப்பிடலாம்.
நிலையான திட்டமிடல் (Standing Use Plan)
நிறுவனத்தின் சகல செயற்பாடுகளை



சந்தகெலும் ஜயதுங்க,
கணக்காளர்,
பிரைம் கிராமின்
மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்.




தோல்வியடைவதற்கு பிரதான காரணம் சந்தேகம் மற்றும் அவநம்பிக்கையாகும்






## பிணையாளர்கள் இல்லாத எளிமையான முறையினால் எம் போன்ற சிறிய வியாபாரிகளுக்கு பாரிய நிவாரணமாகும்

பித்தளை உற்பத்திகளுக்கு பிலிமத்தலாவ பிரசித்த பெற்ற இடமாகும். பிலிமத்தலாவ, கிரிவாவுலவை வசிப்பிடமாகக் கொண்ட சீதா ஹாமின்னவின் கணவர் பாரம்பரியமாக பித்தளை தொழிலில் ஈடுபட்டு வரும் குடிமகனாகும். சீதா ஹாமினே தமது வியாபார வாழ்க்கை தொடர்பில் பிரைம் கிராமின் நிறுவனம் வழங்கிய பங்களிப்பு தொடர்பில் இவ்விதம் விளக்குகிறார். நாம் பித்தளை உருக்குதல் உட்பட சகல பித்தளை வேலையும் செய்து வருகிறோம். பித்தளை விளக்கு, மலர்கொத்து, பாத்திரங்கள் ஆகிய உற்பத்தி செய்யப்படுகின்றன. கண்டியில் இருந்து கொழும்பு, கதிர்காமம் வரையும் எமது உற்பத்திகள் விற்பனை செய்யப்படுகின்றன. என்னிடம் ஆறு பேர் தொழில் புரிகின்றனர். விற்பனை அதிகமான நாட்களில் 20 - 30 பேர் வரை தொழில் புரிந்த சந்தர்ப்பமும் உண்டு. இந்தத் தொழிலுக்கு நாளாந்தம் பணம் தேவைப்படுகிறது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் விரைவாகவும் இலகுவாகவும் கடன் பெறக்கூடிய இடமொன்று இருந்தால் எம் போன்றவர்களுக்கு கைத்தொழிலை செய்வதற்கு இலகுவாக இருக்கும். ஏனெனில் வங்கியில் கடன் எடுப்பதென்றால் சொத்து, பிணையாளர்களை தேடிச் செல்ல வேண்டும். அவ்வாறான நிலை காணப்படும் சந்தர்ப்பத்தில் பிரைம் கிராமின் நிறுவனம் கடன் வழங்கும் போது பிணையாளர்கள் இன்றி எளிமையான முறையினால் எம் போன்ற சிறிய வியாபாரிகளுக்கு பாரிய நிவாரணமாகும். நான் கிராமின் நிறுவனத்தில் 2004ஆம் ஆண்டு இணைந்து கொண்டேன். அன்றிலிருந்து இன்று வரை எனது வியாபாரத்துக்கு தேவையான நிதியை தேவையான போது வழங்கியது பிரைம் கிராமின் நிறுவனமாகும்.

எஸ்.ஏ.சீதா ஹாமினே
கிரிவாவுல பிலிமத்தலாவ

## “முன் அனுபவமுள்ள நண்பர்களுடனும் எச்.என்.பி.யுடனும் இணைந்து வலுவான கிராமின் நிறுவனம் எமக்கு இன்னும் பாரிய சக்தியாகும்.“

அழகுக்கலை என்பது அனேகமாக மேனியை அலங்கரிப்பது என்றால் மிகையாகாது. ஷாமலி சுரங்கிகா “சலூன் ஷமி” என்ற பெயரில் ஆர்பிக்கப்பட்ட அவரின் நிறுவனம் இன்று வரை அவர்களின் வியாபாரத்துக்கு பல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய கிராமின் நுண் நிதி கடன் திட்டமாகும்.
அவர்களின் வளர்ச்சிக்கு கிராமின் நிறுவனம் வழங்கிய பங்களிப்பு தொடர்பில் ஷாமலி வழங்கிய கருத்துக்களை கீழே தருகின்றோம்.



மணப்பெண் அலங்காரம், தலைமுடி வெட்டுதல், வடிவமைத்தல் போன்ற அழகுக்கலைகள் இங்கு செய்யப்படுகின்றன. நானும் எனது கணவரும் இணைந்து ஆரம்பித்த இந்த கைத்தொழில் இன்னும் சிறப்பாக செய்வதற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு கிராமின் நிறுவனத்தின் நுண்நிதி கடன் திட்டம் எமக்கு பாரிய துணையாக இருந்தது.

நான் இந்த கைத்தொழிலை ஆரம்பிக்க முன்னர் சில்லறை கடையொன்றை நடத்தி வந்தேன். அதற்காக நான் அந்தக் காலப்பகுதியில் 25,000 ரூபா கடன் பெற்றேன். அதன் பிறகு இந்தத் தொழிலை ஆரம்பித்தேன். அன்று போலவே இன்றும் நண்பனாகவும் நம்பிக்கைக்குரிய நிறுவனமாகவும் கிராமின் நிறுவனம் இருக்கின்றமை பாரிய சக்தியாகும்.

ஷாமலி சுரங்கிகா, சலூன் ஷமி

## மூலப்பொருட்களை கொள்வனவு செய்ய முடியாமல் இருந்த போது கிராமின் நிறுவனத்தில் இணைந்தவுடன் தீர்வு கிடைத்தது



குல், மணல் இல்லாத சுத்தமான அரிசி சந்தைக்கு வந்தவுடன் நகரங்களுக்கு அண்மையில் உள்ள அனேக வீடுகளில் கைவிடப்பட்ட உபகரணங்களாக குறிப்பிட முடியும். நகரத்தின் நிலை அவ்வாறு இருக்கும் போது இன்றும் அண்மைய விவசாயக் கிராமங்களில் குள்ளட நல்ல வரவேற்பு காணப்படுகிறது. கண்டி ஹன்தெஸ்ஸ பிரதேசத்தில் சுளகு உற்பத்தி கிராமமாக அடையாளப்படுத்தப்படுகிறது. அவ்வாறே பாரம்பரியமாக இந்தத் தொழிலை செய்து வருவதால் இப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் சுளகுகளுக்கு பாரிய கிராக்கி நிலவுகிறது.
நாம் இந்தத் தொழிலை பாரம்பரியமாக செய்து வருகிறோம். நாம் உற்பத்தி செய்யும் சுளகுகள் தம்புள்ள, மாத்தளை, மிஹிந்தலை, கெக்கிராவ, திரப்பனை, கல்குளம், தெரிபேஹே போன்ற பிரதேசத்தில் விற்பனை செய்யப்படுவதுடன் நாங்கள் பஸ்களின் எடுத்துச் சென்று அங்குள்ள கடைகளில் விநியோகிக்கின்றோம். கேள்விக்கு ஏற்பவே நாம் சுளகுகளை கொண்டு செல்வோம். இந்த கைத்தொழிலுக்கு தேவையான மூங்கில் மற்றும் ஏனைய மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதில் ஆரம்பத்தில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன. பிரைம் கிராமின் நாரங்வல மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட உடன் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது. 10,000 ரூபாவில் இருந்து 60,000 ரூபா வரை கட்டம் கட்டமாக தேவைக்கு ஏற்ப கடன் பெற்றுக் கொண்டோம். கிராமின் நிறுவனம் இந்த கடன் முறையை அறிமுகப்படுத்தியமை எம்போன்ற சிறிய கைத்தொழிலாளர்களுக்கு நன்மையாகும்.

ஸ்ரீயானி மஞ்சுளா
ஹன்தெஸ்ஸ

## Happy Birthday

ஜூலை, ஆகஸ்ட் மாத பிறந்த நாளைக் கொண்டாடும் பிரைம் கிராமின் நிறுவன ஊழியர்களுக்கு எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்...!

| பெயர் | திகதி | கிளை |
|---|---|---|
| திரு. ஏரங்க ஸ்ரீமால் | ஜூலை 16 | மதவாச்சி |
| திரு. நிவ்டன் புஷ்பகுமார | ஜூலை 16 | மஹியங்கனை |
| திரு. சுந்தருவன் திஸாநாயக்க | ஜூலை 16 | மஹியங்கனை |
| திரு. சுனந்த மென்டிஸ் | ஜூலை 17 | தலைமையகம் |
| திரு. மதுஜித் பிரியங்கர | ஜூலை 17 | அம்லாங்கொடை |
| திரு. யசித சாந்த | ஜூலை 17 | மொனராகலை |
| திரு. வந்த குமார | ஜூலை 18 | ஹோமாகம |
| திரு. சம்பத் கருணாரத்ன | ஜூலை 18 | மொனராகலை |
| திரு. எரந்த விதானகே | ஜூலை 19 | மாத்தறை |
| திரு. கே. சுப்ரமணியம் | ஜூலை 19 | நுவரெலியா |
| திரு. தனஞ்சய குமாரஸ்ரீ | ஜூலை 19 | மத்துகம |
| திரு. சுகத் பண்டார | ஜூலை 20 | நகரக்கிளை |
| திரு. பந்துல அபேவிக்ரம | ஜூலை 20 | வெலிமடை |
| திருமதி. வுகீஸா அபேவிக்ரம | ஜூலை 20 | தலைமையகம் |
| திரு. சுரங்க லியன்தெனிய | ஜூலை 20 | மஹியங்கனை |
| திரு. இந்திக முதலிகே | ஜூலை 21 | ஹொரனை |
| திரு. மனோஜ் ஸ்ரீ பண்டார | ஜூலை 21 | பதுளை |
| திரு. காமினி ஆரியசிங்க | ஜூலை 22 | தலைமையகம் |
| திரு. ஸ்ரீநாத் ஹேரத் | ஜூலை 22 | நிக்கவரெட்டி |
| திரு. அநுர தனஞ்சய | ஜூலை 23 | நிக்கரவரெட்டி |
| திரு. அநுரகுமார | ஜூலை 23 | பொலன்னறுவை |
| திரு. எரங்க தயானந்த | ஜூலை 23 | அவிஸ்ஸாவளை |
| திரு. சிவநாயகம் யசாந்த் | ஜூலை 23 | மட்டக்களப்பு |
| திரு. கமல் பிரியதர்ஷன | ஜூலை 24 | தலைமையகம் |
| திரு. எஸ். விவேகானந்தன் | ஜூலை 24 | முல்லைத்தீவு |
| திரு. சினேத் திலீஸா | ஜூலை 24 | மொரட்டுவை |
| திரு. பிரபாத் மதுசங்க | ஜூலை 25 | மாத்தறை |
| திரு. கோடித்துவக்குகே பிரியந்த | ஜூலை 25 | ஹம்பாந்தோட்டை |
| திரு. ஷர்னக ருக்ஷான் | ஜூலை 25 | குரநாகல் |
| திருமதி. ரசீ ஹேஷானி | ஜூலை 26 | பெலியத்தை |
| திரு. நிரோஷன் தர்மபிரிய | ஜூலை 27 | குளியாபிட்டி |
| திரு. சுமித் பிரியந்த | ஜூலை 27 | தலைமையகம் |
| திரு. சஞ்சய பெரேரா | ஜூலை 27 | கந்தளாய் |
| திரு. கெலும் சத்துரங்க | ஜூலை 27 | வென்னப்புவ |
| திரு. உதார பண்டார | ஜூலை 28 | புத்தளம் |
| திரு. சுதித ஜயசிங்க | ஜூலை 28 | நிட்டம்புவ |
| திரு. சுமெத பெர்ணாந்து | ஜூலை 29 | அம்பாறை |
| திரு. ருக்ஷான் கெலும் | ஜூலை 29 | வென்னப்புவ |
| திரு. சாஹர சம்பத் | ஜூலை 30 | வெலிமடை |
| திரு. ஏட்வின் லதீப் | ஜூலை30 | மல்லாவி |
| திரு. சஞ்சீவ சுரங்க | ஜூலை 30 | மொரட்டுவை |
| திரு. தனுஷ்கர திலன்க | ஜூலை 30 | அநுராதபுரம் |
| திரு. ருக்ஷான் பெரேரா | ஜூலை 31 | மாத்தறை |
| திரு. பிரகாஷ் குணசேக | ஜூலை 31 | அவிஸ்ஸாவளை |
| திரு. புபுது சிந்தக | ஜூலை 31 | எம்பிலிபிட்டி |
| திரு. ஹேமால் தேஷப்பிரிய | ஆகஸ்ட் 01 | நுவரெலிய |
| திரு. குமாரசேன் வகீசன் | ஆகஸ்ட் 01 | மல்லாவி |
| திரு. உபுல் சாந்தகுமார | ஆகஸ்ட் 02 | பொத்துவில் |
| திரு. அநுர லக்சிறி | ஆகஸ்ட் 02 | பெலியத்தை |
| திரு. எல். ரஜீவ் | ஆகஸ்ட் 02 | மல்லாவி |
| திரு. லுக்ஷிக மதுஜீவ | ஆகஸ்ட் 02 | பதுளை |
| திரு. சந்திரசேகரன் கிறிசாந்தன் | ஆகஸ்ட் 02 | நுவரெலியா |
| திரு. லலித் த சில்வா | ஆகஸ்ட் 03 | நுவரெலியா |
| திரு. எம். ஈஸ்வரன் | ஆகஸ்ட் 03 | மட்டக்களப்பு |
| திரு. விஸ்வ தில்ஷான் | ஆகஸ்ட் 03 | சிலாபம் |
| திரு. இஷான் ரணசிங்க | ஆகஸ்ட் 03 | கல்கமுவ |
| திரு. ஏ.ஆர்.எம். ஜம்சித் | ஆகஸ்ட் 04 | பொத்துவில் |
| திரு. டபிள்யு.கே.ஏ. பிரியங்கர | ஆகஸ்ட் 05 | பெலியத்தை |
| திரு. சுதத் குணரத்ன | ஆகஸ்ட் 05 | நாவலப்பிட்டி |
| திரு. ஜே.அபிஷேக் | ஆகஸ்ட் 05 | குளியாபிட்டி |
| திரு. விஸ்வ பெரேரா | ஆகஸ்ட் 06 | தலைமையகம் |
| திரு. யோகநாதன் சுதர்மன் | ஆகஸ்ட் 06 | அம்பாறை |
| திரு. திஸர சந்தருவன் | ஆகஸ்ட் 04 | மாத்தறை |
| திரு. மாதவ பிரேமரத்ன | ஆகஸ்ட் 07 | கல்கமுவ |
| திரு. திலான் அநுரபண்டார | ஆகஸ்ட் 07 | மொனராகலை |
| திரு. பி. திலகேஸ்வரன் | ஆகஸ்ட் 08 | கிளிநொச்சி |
| திரு. சனத் நந்தன | ஆகஸ்ட் 08 | மஹியங்கனை |
| திரு. சானக மதுரங்க | ஆகஸ்ட் 08 | ஹோமாகம |
| திரு. சானக பத்திரன | ஆகஸ்ட் 08 | சிலாபம் |
| திரு. துஷார சஞ்சீவ | ஆகஸ்ட் 08 | மத்துகம |
| திரு. ஜனுக பண்டார | ஆகஸ்ட் 09 | பொலன்னறுவை |
| திரு. நிஷாந்த பண்டார | ஆகஸ்ட் 09 | கண்டி |
| திரு. ரமீத சில்வா | ஆகஸ்ட் 09 | வென்னப்புவ |
| திரு. கமார பீரிஸ் | ஆகஸ்ட் 09 | மொரட்டுவை |
| திரு. லஹிரு சத்துரங்க | ஆகஸ்ட் 10 | கந்தளாய் |
| திரு. லஹிரு துலான் | ஆகஸ்ட் 10 | களுத்துறை |
| திரு. லலித் வசந்த | ஆகஸ்ட் 12 | ஹம்பாந்தோட்டை |
| திரு. சுரங்க ஜயலால் | ஆகஸ்ட் 12 | பொலன்னறுவை |
| திரு. திகாயு சித்ரசேன | ஆகஸ்ட் 12 | களுத்துறை |
| திரு. மகேஷ் குமார | ஆகஸ்ட் 13 | தலைமையகம் |
| திரு. ஆசிரி உதயகுமார | ஆகஸ்ட் 13 | அவிஸ்ஸாவளை |
| திரு. திருச்செல்வம் | ஆகஸ்ட் 13 | நுவரெலியா |
| திரு. அசங்க இந்திக | ஆகஸ்ட் 13 | அம்பலாங்கொடை |
| திரு. உதேஷ் ஹஷான் பீரிஸ் | ஆகஸ்ட் 13 | நீர்கொழும்பு |
| திரு. நரெஷ் பெர்ணாந்து | ஆகஸ்ட் 14 | நீர்கொழும்பு |
| திரு. அமில புத்திக | ஆகஸ்ட் 14 | நீர்கொழும்பு |
| திரு. கே. காந்தீபன் | ஆகஸ்ட் 14 | திருகோணமலை |
| திரு. சம்மிக குணவர்தன | ஆகஸ்ட் 14 | அநுராதபுரம் |
| திரு. ஜர்ன் சந்துக | ஆகஸ்ட் 14 | ஹம்பாந்தோட்டை |

மெஹெவர HNB GRAMEEN
பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்
இல. : 168, நாவல வீதி, நுகெகொடை
தொலைபேசி: 0112176262 பெக்ஸ் : 0112825843
மின்னஞ்சல்: manjula.p@primegrameen.lk
இணையம்: www.primegrameen.com
பணிப்பாளர்: சமிந்த பிரபாத் (முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர்)
பிரதம ஆசிரியர்: மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
பக்க வடிவமைப்பு: கே.டி. ஷமில சிந்தக (அர்ஜுன கிராபிக்ஸ் (தனியார்) நிறுவனம்
கணணி தட்டெழுத்து உதவி: உதாரி தர்மவர்தன / உதார தனஞ்சய
படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க

சுயமாக சிந்தித்து புதிய படைப்புகளை உருவாக்கும் போது நீங்கள் மாபெரும் செல்வந்தராகலாம்